

தரம் 4,5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை வழிகாட்டல்

MUSLIM MAJLIS
EASTERN UNIVERSITY – SRI LANKA
මුස්ලිම් මජ්ලිස්
නැගෙනහිර විශ්වවිද්‍යාලය - ශ්‍රී ලංකාව
முஸ்லிம் மஜ்லிஸ்
கிழக்கு பல்கலைக்கழகம் - இலங்கை

கருத்தரங்கு
வினாத்தாள் 01
01 மணித்தியாலம்
சுட்டெண்:.....


❖ **கீழே தரப்பட்ட 1ம் 2ம் உருக்களை பூரணப்படுத்த தேவையான உருவை தெரிவு செய்க.**

1. 
1. 
2. 
3. 

2. 
1. 
2. 
3. 


A

❖ **3ம் 4ம் வினாக்களில் தரப்பட்ட உருக்களில் அடுத்து வரும் உருவை தெரிவு செய்க.**

3. 
1) 
2) 
3) 


4. 
1) 
2) 
3) 

❖ **பின்வரும் உருக்களை உருவாக்குவதற்கு பொருத்ததமான உருவை தெரிவு செய்க.**


5. 
1) 
2) 
3) 

6. 
1) 
2) 
3) 

7. இவ் உருவில் உள்ள சதுரங்களின் எண்ணிக்கை யாது?



1) 10 2) 12 3) 8

8. 

சிறுவன் ஒருவனின் பாதை படத்தில் காட்டப்பட்டுள்ளது. அவன் எத்தனை தடவைகள் வலது பக்கமாக திரும்பினான்.

1) 5 2) 4 3) 6

www.lkedu.lk

புதிய கல்வியாண்டு - 2022

LEARN EASY
KNOWLEDGE IS POWER

ZOOM
வகுப்புக்கள்

Grade 2 - O/L

Medium

TAMIL / ENGLISH

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala

Learn Easy வெளியீடு
புலமைவளரி
இலக்கை நோக்கி

Call: 76667 4945


தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள் தரம் 2 தொடக்கம் தரம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

LEARN EASY
KNOWLEDGE IS POWER

சரியான விடையை தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக

9.




1) 28

2) 30

3) 32

10.



1) 30


2) 28

3) 36

11. அருகில் உள்ள உருவை அமைக்கப் பொருத்தமான வெட்டுரு எது?



12. சதுரக் கடதாசி ஒன்றை நான்காக மடித்து அதன் ஒரு பகுதியில் புள்ளிகள் இடப்பட்டுள்ளன. இச் சதுரக்கடதாசியை விரிக்கும் போது தோன்றும் உரு யாது?




13. 2019-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 16 ம் திகதி புதன் கிழமை எனின் அவ்வருடத்தில் உள்ள செவ்வாய்க் கிழமைகள் எத்தனை?

1) 52 2) 53 3) 51

14. கமால் ரூபா 16 இற்கு 12 இனிப்புக்களை வாங்கினான். அவனுக்கு 18 இனிப்புக்கள் வாங்க தேவையான பணம் எவ்வளவு?

1) 24 ரூபா 2) 32 ரூபா 3) 36 ரூபா

15. 1ம் 2ம் தராசுகளில் வைக்கப்பட்டுள்ள பொருட்களின் நிறைகளை அவதானித்து மூன்றாவது தராசில் உள்ள பொருளின் நிறை யாது?




1) 9 கிலோகிராம்

2) 13 கிலோகிராம்

3) 15 கிலோகிராம்

www.ikedu.lk



16. இந்த கணித செய்கைக்கு ஏற்ப  உருவின் பொருமானம் யாது?

1) 6 2) 4 3) 9

17. சீதாவின் தற்போதைய வயது 20 ஆகும் அவளுடைய தந்தையின் தற்போதைய வயது சீதாவின் வயதில் மூன்று மடங்கிலும் பார்க்க 5 கூடியதாகும். இன்னும் 5 வருடங்களில் சீதாவின் தந்தையின் வயது எத்தனை ஆகும்.

1) 50 2) 70 3) 65

18. ஒரு வரிசையில் குமார் 8 ஆவதாக நின்றான் அவனுக்கு பின்னால் 5 பேர் நின்றனர். எனின் அவ்வரிசையில் மொத்தம் எத்தனை பேர் நின்றனர்.

1) 12 2) 13 3) 14

19. ஒரு பின்னை பின்வருமாறு கூறுகின்றது "எனக்கு ஒரு அண்ணாவும் ஒரு தங்கையும் மாத்திரம் உள்ளனர். எனது அம்மாவிற்கு ஒரு மகனும் இரு மகள்மாரும் உள்ளனர்." இதன்படி அப்பிள்ளை குடும்பத்தில்

1) மூத்த மகள் ஆவார் 2) இரண்டாம் மகள் ஆவார். 3) இளைய மகள் ஆவார்

20. ஒரு நிகழ்வில் மூன்று சந்தர்ப்பங்களை ஒழுங்கு முறையில் காட்டும் விடையை தெரிவு செய்க.

1) பழத்தை பறித்தல், பழச்சாறு தயாரித்தல், தோலை உரித்தல்
2) வீட்டைக் கட்டுதல், அத்திவாரமிடல், ஓடு போடுதல்
3) விதையை நடுதல், செடி முளைத்தல், பூக்கள் பூத்தல்

21. ஒரு கடிகாரத்தின் மணித்தியால முள்ளுக்கும் நிமிட முள்ளுக்கும் இடையே உள்ள கோணம் செங்கோணத்திலும் பார்க்க கூடியதாக இருக்கும் சந்தர்ப்பம் எந்நேரத்தில் காட்டுகின்றது?

1) மு.ப. 9.30 2) பி.ப. 12.15 3) பி.ப. 3 00

22. 120 மாம்பழங்களைக் கொண்ட குவியலில் $\frac{3}{8}$ பழுதடைந்து அகற்றப்பட்ட பின்னர் மிகுதியாக இருந்த நல்ல பழங்களை மூன்று நண்பர்களுக்கு பகிர்ந்து கொடுக்கப்பட்டது. எனின் ஒரு நண்பனுக்கு கிடைத்த மாம்பழங்களின் எண்ணிக்கை யாது?

1) 15 2) 25 3) 20


பின்வரும் இரு தமிழ் சொற்களிலும் உள்ள தமிழ் எழுத்துக்களுக்கு பதிலாக ஒழுங்கின்றி இலக்கமிடப்பட்டுள்ளன. அதன்படி 23 ம் வினாக்கு விடை தருக.

கடுகதி - 1299 கதிர் -139


23. எழுத்து **க** விற்கு பதிலாக இடப்பட்ட இலக்கம் யாது?

1) 2 2) 1 3) 9


24. மனிதன், ஆண், பெண் ஆகியோருக்கு இடையிலான தொடர்பைக் காட்டும் விடையை தெரிவு செய்க.



1.



2.



3.

www.ikedu.lk

25. நான்கு நண்பர்கள் தமக்கிடையே கைகுழுக்கிக் கொண்டனர் அவர்களுக்கிடையே நடைபெற்ற கைகுழுக்கள்கள் எத்தனை?

1) 12 2) 6 3) 8

26. 175 125 141 132 எனும் எண்களை ஏறுவரிசையில் எழுதும் போது கிடைக்கும் முதலாம் எண்ணினதும் மூன்றாம் எண்ணினதும் நடுவில் இருக்கும் இலக்கங்கள் முறையே,

1) 2, 4 2) 7, 4 3) 2, 3

27. கமலாவிடம் ரூ100.00 ரூ50.00 ரூ20.00 நாணயத்தாள்களில் மாத்திரம் ரூ. 390.00 உண்டு அவளிடம் உள்ள ரூ20.00 தாள் நாணயங்கள் எத்தனை?

1) 1. 2) 5 3) 2


28. குறித்த ஒரு ஆண்டின் மார்ச் மாதம் 1ம் திகதி திங்கட் கிழமை ஆகும். எனின் ஏப்ரல் மாதம் 1 ம் திகதி என்ன கிழமை?


1) புதன் 2) வியாழன் 3) செவ்வாய்

29. 20ஆம் நூற்றாண்டும் 5ம் தாசாப்தமும் ஆக அமையும் ஆண்டு எது?

1) 1992 2) 1945 3) 1955

.





30. மேலுள்ள விலை தொடர்பின் படி ஒரு மாம்பழத்தின் விலை யாது?

1) ரூ.80.00 2) ரூ.100.00 3) ரூ. 60.00

31. மாதுளம் பழத்தின் விலை யாது?


1) ரூ.120.00 2) ரூ. 60.00 3) ரூ.100.00

32. காலை 10 மணியளவில் நான் சந்தையில் இருந்த விடு திரும்பம் போது எனது நிழல் எனது இடது கைப்பக்கம் காணப்பட்டது எனின் நான் எத் திசையை நோக்கி நடந்துகொண்டு இருந்தேன்.


1) தெற்கு 2) வடக்கு 3) மேற்கு


33. ஒரு பண்ணையில் ஆடுகளும் கோழிகளும் 32 வளர்க்கப்பட்டது. அவற்றின் கால்களின் எண்ணிக்கை 78 ஆகும். ஏனின் அப்பண்ணையில் உள்ள ஆடுகள் எத்தனை? கோழிகள் எத்தனை?

1) 7. 25 2) 10. 22 3) 8. 26



34. மேலேயுள்ள தாயக்கட்டைகளை விரித்து பார்க்கும் போது தோன்றும் உருவை தெரிவு செய்க.



35. 

இக்கடிகார முகத்தை தளவாடியில் பார்க்கும் போது தோன்றும் நேரம் யாது ?

1) 3 மணி 20 நிமிடங்கள் 2) 4மணி 20 நிமிடங்கள் 3) 5மணி 20 நிமிடங்கள்

www.ikedu.lk

36. 10 இற்கும் 100 இற்கும் இடையில் உள்ள எண்களில் 4, 5 இனால் மீதியின்றி வகுபடும் எண்கள் எத்தனை?

1) 5 2) 4 3) 6

37. ஒரு பக்க நீளம் 2m ஆகவுள்ள ஒரு சதுரவடிவ சுவர் ஒன்றிற்கு வெள்ளை அடிப்பதற்கு ரூ.300.00 தேவைபடுகின்றது. ஒரு பக்கத்தின் நீளம் 4m ஆகவுள்ள சதுரவடிவ சுவர் ஒன்றிற்கு வெள்ளை அடிப்பதற்கு தேவைப்படும் பணம் எவ்வளவு?

1) ரூ.600.00 2) ரூ.1200.00 3) ரூ. 900.00

➢ **பாடலடியை வாசித்து விடை தருக**

புகை எழுப்பா வண்டில்
மெல்ல செல்லும் வண்டில்
நெல்லு மூட்டை ஏற்றியே
நிறைந்து போகுது வண்டி

38. இப்பாடலில் குறிப்பிடப்படும் வண்டி எது?

1) புகைவண்டி 2) மாட்டுவண்டி 3)துவிச்சக்கரவண்டி

39. பின்வரும் வாக்கியத்தினை பொருள் தரும் வகையில் முடிக்கும் கூற்றை தெரிவு செய்க

நேற்று கடும் மழை பெய்ததால் அதிகமான மாணவர்கள்

1) பாடசாலைக்கு வந்தார்கள்
2) பாடசாலைக்கு வரமாட்டார்கள்
3) பாடசாலைக்கு வரவில்லை

40. "**கடலில் அதிகளவு மீன்கள் இறந்து கரையொதுங்கியது**" இதற்கு காரணமாக இருக்கக் கூடியது

1) கடலில் உப்பு அதிகரித்தமை
2) கடல் அதிகளவு மாசடைந்தமை
3) மீனவர்கள் அதிகளவில் மீன்களை பிடித்தமை

www.lkedu.lk

தரம் 4,5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை வழிகாட்டல்

MUSLIM MAJLIS

EASTERN UNIVERSITY – SRI LANKA

මුස්ලිම් මජ්ලිස්

නැගෙනහිර විශ්වවිද්‍යාලය - ශ්‍රී ලංකාව

முஸ்லிம் மஜ்லிஸ்

கிழக்கு பல்கலைக்கழகம் - இலங்கை

கருத்தரங்கு
வினாத்தாள் 02
01 மணி 15நிமிடம்
சுட்டெண்:.....

01.பின்வரும் பந்தியை வாசியுங்கள்

ஊக்கமும் விடாமுயற்சியும் வெற்றிக்கு ஏணிப்படிகள். இன்று நம் வீடுகளில் மின்விளக்குகள் எறிகின்றன. ஒன்றறை நூற்றாண்டுகளுக்கு முன் இந்த மின் விளக்குகள் நம்மிடையே இல்லை. தோமஸ் அல்வா எடிசன் என்பவர் 19 ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மின் விளக்கை கண்டு பிடிக்க ஆராய்ச்சி செய்தார். தமது முதல் முயற்சியிலே தோல்வி கண்டார். சலைக்காது தனது ஆய்வைத் தொடர்ந்தார். பல முயற்சிகள் தோல்வியைக் கண்ட அவர் இறுதியில் தம் ஆராய்ச்சியில் வெற்றி கண்டார். மின்விளக்கு எரியத்தொடங்கியது. "முயற்சி திருவினையாக்கும்" என்பதற்கு இனங்க வெற்றி பெற்றார். இன்றும் வீடுகளிலே மின்விளக்குகள் எரிய முன்னோடியாகத் திகழ்ந்த அறிவியல் மேதை தோமஸ் அல்வா எடிசன் ஆவார்.

பந்தியை மாத்திரம் துணையாகக் கொண்டு விடை தருக.

1) யாருடைய சாதனை பற்றி இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது?.....

2) மின் விளக்குகள் கண்டுபிடிக்கும் ஆராய்ச்சி எப்போது தொடங்கப்பட்டது?.....

3) வெற்றிக்கு ஏணிப்படிகள் எவை?.....

4) மேற்கோள்களாக அமையும் கூற்று எது?.....

5) பலமுறைகள் தோல்வியைக் கண்டாலும் இறுதியில் வெற்றி காண உதவியது எது?.....

6) மடக்கேறும் அரவும் கொண்ட சொல் ஒன்றை தருக?.....

02.கீழே தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியம் ஒன்றை எழுதுக.

வாசிப்பை \ போது \ தான் \செயற்பாடு \கற்றல் \ விரிகிறது \தொடரும்

.....

03.பின்வரும் மரபுத் தொடரின் கருத்தை எழுதுக

1) ஆறப்போடுதல்.....

2) பூசிமெழுகுதல்.....

04.பின்வரும் ஒவ்வொரு வாக்கியங்களில் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் அடைப்பினுள் எழுதுக.

1) எங்கள் வீட்டுக்கு மாமாவும் மாமியும் வந்தார். (.....)

2) அக்கா நண்பிகளுக்கு குறுஞ்செய்தி அனுப்பினாள். (.....)

3) கிராமியப் பாடல்கள் கிராமிய உணர்வை தருகின்றன. (.....)

4) நாங்கள் வகுப்பறைக்கு கால் நடையாக சென்றோம் (.....)

www.lkedu.lk

05. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்திற்கு பொருத்தமான சொல்லை அடைப்பிற்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக

1) நீண்ட நாட்கள் நோய் நொடி இன்றி உயிர் வாழ வேண்டுமானால் ..... (ஊன்,ஊண்) உணவுகளைத் தவிர்த்தல் வேண்டும்.
2) மழை வெள்ளம் எங்கும் ..... (பரந்து, பறந்து) பாய்ந்தது.

06. பின்வரும் வாக்கியங்களுக்கு பொறுத்தமான நிறுத்தக் குறியீடுகளை இடுக.

1) எவ்வளவு பெரிய சிலை
2) அறம் செய்ய விரும்பு என்றார் ஔவைப்பாட்டி

07. பின்வரும் பழமொழிகளை பூர்த்தி செய்க

1) குப்பையிற் கிடந்தாலும் .....
2) சித்திரமும்.....நாப்பழக்கம்.

08. பின்வரும் வாக்கியத்தை எதிர்பால் வாக்கியமாக மாற்றி எழுதுக

1) அவன் மெதுவாக நடந்து சென்றான்.

.....

09. தரப்பட்டுள்ள இறந்தகால வாக்கியத்தை எதிர்கால வாக்கியமாக மாற்றி எழுதுக

தொழிலாளர்கள் தோட்டத்தில் வேலை செய்தனர்

1) .....

10. தனிச் சொல்லை எழுதுக


1) ஒன்றைப் போல பிரதி எடுத்தல்.....
2) அறிஞர்கள் வாதிடும் களம்.....

தமிழ்மொழி 25 புள்ளிகள்

11. பின்வரும் ஆங்கில சொற்களின் கருத்தை தமிழில் எழுதுக

1) Parrot -..... Rabbit-.....

12. பின்வரும் ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களிளே எழுதுக.





....

13. பின்வரும் சொற்களை சரியாக ஒழுங்கு படுத்தி கருத்துள்ள வாக்கியம் ஆக்குக.

many /are/there?/How/trees

.....

14. பின்வரும் சிங்கள சொற்களுக்குறிய தமிழ் கருத்தை எழுதுக.

பந்திகாமரய : .....

www.lkedu.lk

15. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தை தமிழில் எழுதுக

உங்கள் பெயர் என்ன?

.....

ஆங்கிலம் 6 புள்ளிகள் சிங்களம்- 3 புள்ளிகள்

16. "முப்பதாயிரத்து எழுநூற்று நாற்பத்தொன்று"என்பதுடன் ஒன்றைக் கூட்டி வரும் எண்ணை இலக்கத்தில் எழுதுக

.....


17. புகையிரத நிலையமொன்றில் ஒரு நாளில் 3443 பேர் பிரவேசித்தனர். 1869 பேர் வெளியேறினர். பிரவேசித்தோர் தொகைக்கும் வெளியேறியோர் தொகைக்கும் இடையேயான வித்தியாசம் எவ்வளவு?.....

18. ஒரு மாணவனுக்கு 4 அப்பியாச புத்தகங்கள் வீதம் பகிர்ந்தளிப்பதற்காக ஒரு பாடசாலைக்கு 840 அப்பியாச புத்தகங்கள் தேவைப்பட்டன எனின். அப்பாடசாலையில் உள்ள மாணவர்கள் எத்தனை?.....

19. நான் வீட்டில் இருந்து பாடசாலை வரும் போது 1 கிலோமீற்றர் 850 மீற்றர் தூரம் நடந்து வருவேன். பின்னர் 5 கிலோமீற்றர் 950 மீற்றர் தூரம் பஸ் வண்டியில் வருவேன். எனது வீட்டில் இருந்து பாடசாலை வரையிலான தூரம் எவ்வளவு?.....

20. குமுதன் ரூபா 65 இற்கு நிறப்பென்சில் பெட்டி ஒன்றை வாங்குவதற்காக 1000 ரூபாய் நாணயத்தாள் ஒன்றை கொடுத்தால் கிடைக்கும் மீதிப்பணம் எவ்வளவு?.....

21. குகன் பி.ப 5.15 மணி தொடக்கம் பி.ப 7 மணி வரை வேலை செய்தான். குகன் எவ்வளவு நேரம் வீட்டு வேலை செய்தான்.....

22. 

இரண்டு பாத்திரங்களிலும் உள்ள நீரின் அளவை ml இல் தருக

.....

23. 250 கிராம் மீனின் விலை ரூ.110.00 எனின் 2 கிலோ மீனின் விலை யாது,?.....

24. 25l நீர் நிரப்பக்கூடிய ஒரு தொட்டியில் 12l 350 ml நீர் உள்ளது. தொட்டியை முழுமையாக நிரப்புவதற்கு மேலும் எவ்வளவு நீர் தேவை?.....

25. பின்வரும் லிலைப்பட்டியலை அவதானித்து சிட்டை பூர்த்தி செய்க.


உருளைக்கிழங்கு	1 kg	ரூ. 240.00
மிளகாய்த்தூள்	1 kg	ரூ. 360.00
ரின் மீன்	1	ரூ. 160.00

வாங்கிய பொருள்	அளவு	விலை	
		ரூபா	சதம்
உருளைக்கிழங்கு	500 g	120	00
மிளகாய்த்தூள்	2 kg	.....	.....
ரின் மீன்	3	.....	.....
மொத்தம்		.....	.....

www.ikeduk

26. சமனான அளவுள்ள 3 மேசைகளில் விரிப்பதற்காக 6m 75cm மேசைத்துணி கொண்டுவரப்பட்டது. ஒரு மேசைக்குத் தேவையான துணியின் நீளம் எவ்வனவு ?.....

27. குறித்த ஒரு பாடசாலையில் மாணவர்கள் அதிகமாக விரும்பும் விளையாட்டுத் தொடர்பான தகவல்கள் வரைபில் காட்டப்பட்டுள்ளன.




1. 45 மணவர்கள் பட்மிட்டன் விரும்புகின்றனர் எனின் அதனை வரைபில் வரைந்து காட்டுக.
2) அதிக மாணவர்கள் விரும்பும் விளையாட்டு எது?

.....

3) அவ்விளையாட்டை விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கை யாது?

.....

28.



உருவில் நிழற்றப்பட்ட பகுதியை தசம எண்ணாக எழுதுக

.....

கணிதம் 28 புள்ளிகள்

29 தொடக்கம் 59 வயைுள்ள ஒவ்வொரு வினாக்களுக்கும் பொருத்தமான விடையை தரப்பட்டுள்ள விடைகளில் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

29. பின்வருவனவற்றில் இயற்கை அனர்த்தமாக அமையாதது?
1.வெள்ளப் பெருக்கு 2) வாகன விபத்து 3) மின்னல் தாக்குதல்

30. குளிர்பான போத்தல்களில் அதிகளவு சீனி அதிகளவு உள்ளதெனின் அக் குளிர் பான போத்தல்களில் குறிப்பிடப் பட்டிருக்கும் நிறமானது?
1.மஞ்சல் 2.பச்சை 3) சிவப்பு

31. மழைமாணியில் காணப்படும் அளகு யாது?
1) மில்லிலீற்றர் 2. மில்லிமீற்றர் 3. சென்றி மீற்றர்

32. இலங்கையில் சுதந்திர தினம்
1. பெப்ரவரி 6 2. பெப்ரவரி 4 3.பெப்ரவரி 5

33. மாணவர்கள் நாட்டிற்கு செய்ய வேண்டிய கடமைகள் அல்லாதது.
1.சட்டதிட்டங்களை மதித்தல்
2.பொது சொத்துக்களை பாதகாத்தல்
3.பாடசாலை வளங்களை அழித்தல்

34. காந்தத்தின் வட முனைவு குறிக்கப்படும் நிறம்
1. நீலம் 2. சிவப்பு 3. பச்சை

35. பொலித்தீன் பிளாஸ்திக் கழிவுகளை இடுவதற்காக வைக்கப்படும் குப்பை பொட்டியின் நிறம்?
1. நீலம் 2. செம்மஞ்சல் 3. சிவப்பு

36. எமது நாட்டில் சில மரபுரிமைகள் தேசிய மரபுரிமைகளாக மட்டுமன்றி உலக மரபுரிமைகளாகவும் கணிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் உள்ளடங்காதது
1. சீகிரியா 2. சிங்கராஜ வனம் 3. பாடசாலைகள்

www.ikeau.lk

37. அசுத்த நீரைப் பருகுவதால் ஏற்படும் நோய்

1) மலேரியா 2) டெங்கு 3) நெருப்புக்காய்ச்சல்

38. நுளம்புகள் பரவுவதை தடுக்கக் கூடிய மிகச் சிறந்த இலகுவான முறை

1) தூங்கும் போது நுளம்பு வலை பாவித்தல்.
2) நுளம்பு முட்டைகளை அழித்தல்.
3) சூழலில் நீர் தேங்கும் இடங்களை மூடி விடல்.

39. தேசப்படங்களில் நீர் நிலைகளை குறித்துக் காட்டும் நிறம்.

1) நீலம் 2) பச்சை 3) சிவப்பு

40. வித்துக்களுள் மிக விரைவாக முளைக்கும் வித்து.

1) பயறு 2) கரட் 3) புடோல்

41. பயிர் செய்கைக்கு மிகவும் பொருத்தமான மண் வகை.

1) மணல் மண் 2) இருவாட்டி மண் 3) களிமண்

42. பற்ச்சக்கரம் மூலம் இயங்கும் ஓர் உபகரணம்.

1) தள்ளு வண்டி 2) மாட்டுவண்டி 3) கடிகாரம்

43. காந்தம் கவரும் பொருள்.

1) இரும்பு 2) பித்தளை 3) பிளாஸ்டிக்

44. இவ்வுபகரணத்தால் செய்யத்தக்க வேலை



1) போத்தல் மூடிகளை திறத்தல்
2) பலகையைச் சீவுதல்
3) கடதாசிகளை துளையிடுதல்

45. வயல் உழுவதற்கு பயன்படும் உபகரணம்

1) அரிவாள் 2) மண்வெட்டி 3) கலப்பை

46. உப்பிட்டு பாதுகாக்கப்படாத உணவு

1) மீன் 2) தேசிக்காய் 3)கொரக்காய்

47. திறந்து வைத்து சமைக்கப்பட வேண்டிய உணவு

1) இறைச்சி 2)மரவள்ளிக்கிழங்கு 3) வற்றாளை

48. இச்செயற்பாட்டின் போது அவதானிக்க கூடியது?



1) நீரின் இயல்பு மறாது
2) நீரின் நிறம் மாறும்
3) நீர் ஆவியாகும்

49. பொதி செய்யப்பட்ட உணவுகளை கொள்ளளவு செய்யும் போது முதலில் அவதானிக்கப்பட வேண்டியது

1) விலை 2)உற்பத்தி திகதி 3)காலவதி திகதி

50. உப்பு விரைவாக கரையும் நீர்.

1) சுடுநீர் 2) குளிர் நீர் 3)தண்ணீர்

www.lkedu.lk

51. தேசிய இலட்சனையில் தன்னிறைவு எனும் கருத்தை உணர்த்தும் பகுதி.
1) நெற்கதிர் 2) பூவிதழ் 3) சூரியன்

52. கலா வாவியை கட்டுவித்த மன்னன்.
1) தாதுசேனன் 2) மகாசேனன் 3) பண்டுகாபயன்

53. கட்புல செவிப்புல ஊடகம்.
1) வானொலி 2) தொலைகாட்சி 3) ஒலிபெருக்கி

54. கிராமிய விளையாட்டுக்களில் ஒன்று.
1) கிரிகெட் 2) கரப்பந்து 3) சடுகுடு


55. ஒல்லாந்தரின் புகழ்மிக்க கோட்டை காணப்படும் இடம்
1) காலி 2) கதிர்காமம் 3) பொலன்னறுவை

56. இலங்கையின் மிக நீளமான ஆறு.
1) மகாவலி கங்கை 2) ஜின் கங்கை 3) களனி கங்கை

57. மனதை ஒரு நிலைப்படுத்தும் செயற்பாடுகளில் முதலாவது படிமுறை.
1) உடலை தளர்த்தல் 2) பிரார்த்தணை 3) உறுதிப்பாடு

58. காற்றின் மூலம் இசைக்கும் இசை கருவி.
1) வயலின் 2) மத்தளம் 3)புல்லாங்குழல்

59. பலகையை மட்டமாக சீவுவதற்கு தச்சன் பயன்படுத்தும் உபகரணம் எது?

1. 
2. 
3. 

60. "**தொற்று நேய்களில் இருந்து பாதுகாப்பு பெறுவோம்"** என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்கு குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய்,பயனிலைத் தொடர்பும் எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்)

1) .....
.....
2) .....
.....
3) .....
.....

www.ikedu.lk